# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




மன்னா – 11 ஜனவரி 2022 பிரதி – 10



# ஆயர் மடல்



அன்பு மிக்கவர்களே! உங்கள் அனைவருக்கும் உலக மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

ஆண்டவரின் கிருபையால் 1-11-2021 அன்று நமது திருச்சபையில் பணி நியமனம் பெற்றேன். ஆனால் விசா கிடைப்பதில் காலதாமதமானது. ஆண்டவரின் கருணையால் 17-12-2021 நமது ஆலயத்தில் வந்து தொழுகை நடத்தும் வாய்ப்பை பெற்றேன். ஆண்டவருக்கு நன்றி சொல்லுகிறேன். வரவேற்று ஏற்றுக்கொண்ட சபைக்குழு, சபைமக்கள் அனைவருக்கும் நன்றி.

2021-ம் ஆண்டில் பல்வேறு கடினங்களை சந்தித்தோம். கொரோனா வைரசின் தாக்கம் இதனால் ஆலய ஆராதனை தடைப்பட்டது, பலர் வைரசால் பாதிக்கப்பட்டனர். சிலர் நித்திய வாழ்வில் இணைந்தார்கள். அவர்களின் நல்ல வாழ்வை நினைவுகூர்ந்து குடும்பங்களுக்காக தொடர்ந்து ஜெபிப்போம். நாம் விழித்திருந்து ஜெபிக்கவேண்டிய காலத்தின் கட்டாயத்தில் இருக்கிறோம்.

2021-ம் ஆண்டு முழுவதும் ஜெபத்தாலும், காணிக்கையாலும், திருச்சபையின் திருப்பணியில் ஆர்வமாய் பங்குகொண்ட சபைக்குழு, கிளைசங்க பொறுப்பாளர்கள் மற்றும் அங்கத்தினர்கள், சபையின் அனைத்து விசுவாச குடும்பத்தாருக்கும் நன்றி. ஆலய ஆராதனை தடைபடாமல் நடைபெறவும், எல்லோரும் இணைந்து பங்குகொள்ளவும் ஜெபிப்போம்.

கிறிஸ்து பிறப்பு, புத்தாண்டு விடுமுறைக்காக சொந்த ஊர் சென்றவர்கள், மீண்டும் பணியிடம் திரும்பும் அனைவரின் பயண பாதுகாப்பிற்காகவும், அவர்களின் குடும்பங்களுக்காகவும் ஜெபிப்போம். வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலை கிடைக்க ஜெபிப்போம்.

2022-ம் ஆண்டு அனைவருக்கும் ஆசீர்வாதமாய் அமையட்டும். புத்தாண்டில் புதிய சிந்தையோடு இணைந்து செயல்படுவோம்.

ஆண்டவரின் ஆசி நம் அனைவரோடும் இருப்பதாக.

**அன்புடன் போதகர்,**

**Rev. S. போவாஸ்**

# ஆயர் அருளுரை

## விழிப்புணர்வுடன் வாழ்தல்

**"எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாக காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள்" (லூக்கா 12:34a)**




அன்புமிக்கவர்களே! காலத்தை தள்ள வேண்டும் என்று நினைப்பவர்கள் சோம்பேறிகள். வெல்லவேண்டும் என நினைப்பவர்கள் எப்போதும் விழிப்புணர்வுடன் இருப்பார்கள். நாம் விழிப்புணர்வோடு வாழக் கற்றுக் கொண்டோம் என்றால் உலக முடிவுகளைப்பற்றி வரும் செய்திகளை கண்டு பயப்படமாட்டோம். இன்று உலகில் நடைபெறும் பல்வேறு கொடிய நிகழ்வுகளை நாம் பார்த்தும், கேட்டும் அறிந்துகொள்கிறோம். உலகை அச்சுறுத்தி கொண்டிருக்கும் கொடிய ஆட்கொல்லி வைரஸ் கொரோனா, ஒமைக்ரான் - இவற்றின் தாக்கம், வேலை இழப்பு, பொருளாதார பின்னடைவு, பொருட்களின் விலைஉயர்வு, வறுமை, பஞ்சம், தண்ணீர் இல்லா நிலை ஒரு பக்கம், இன்னொரு பக்கம் தண்ணீரினால் பேரழிவு, நாட்டு தலைவர்களின் சுயநலம், குழந்தைகள் பாடசாலைக்கு செல்லமுடியாத நிலை, மக்கள் இல்லங்களில் முடங்கி இருக்கும் நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவை விழிப்புணர்வுடன் வாழவேண்டும் என எச்சரிப்பை தருகிறது. நாம் புத்தாண்டில் எவ்வாறு விழிப்புணர்வுடன் வாழ்வது?

### 1. பாவத்தை விட்டுவிடுவதில் விழிப்புணர்வு:-

பாவம் நிறைந்த உலகிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பாவம் நிறைந்த உலகில் வாழ்வது என்பது சேறும், சகதியும், குண்டும் குழியும் நிறைந்த பாதை வழியே செல்வது போன்றது. கண்களை மூடிக்கொண்டு சென்றோம் என்றால் குழியில் விழுந்து சேற்றில் புரள ஆரம்பிப்போம். கண்களை திறந்து செல்லும்போது அனைத்து தடைகளையும் கடந்து எளிதாக செல்லமுடியும். விழிப்புணர்வு இல்லாமல் இந்த உலகம் தரும் எல்லா மதிப்பீடுகளையும் கண்ணை மூடி நம்பினோம் என்றால் பாவ சேற்றில் வீழ்வது தவிர்க்க இயலாததாகிவிடும். மாறாக விழிப்புணர்வோடு செயல்படும்போது பாவக்குழிகளை இனம் கண்டுகொண்டு அவற்றில் சிக்காமல் அவற்றை தாண்டி செல்ல ஆரம்பித்துவிடுவோம். சிம்சோன் பலசாலியான மனிதர். நசரேய வாழ்வு வாழ்ந்தவர். பாவத்தில் வீழ்ந்து

போனார். அவரது வாழ்வே அழிந்துபோனது. பாவத்தில் வீழ்ந்து போகாமல் இருக்க விழிப்புணர்வு வேண்டும். (நியா. 16:23-31)

வீட்டு பணியாளர்கள், தலைவன் எப்போது வந்தாலும் அவர்கள் தங்கள் கடமைகளை சரியாக நிறைவேற்ற விழிப்பாக இருந்தால் உள்ளத்தில் பயம் இருக்காது. ஏமாற்றுகிறவர்கள் உள்ளத்தில் பயம் இருக்கும் (லூக். 7:35-40). அனைத்து இன்ப துன்பங்களிலும் விழிப்பாக செயல்படுகிறவர்கள் ஏமாற்றுவது இல்லை. காரணம் ஆண்டவர் நேர்மைக்கு தக்க பரிசளிப்பார் என்பதில் அவர்களுக்கு அபார நம்பிக்கை உண்டு. நாம் விசுவாசம் வைக்கவேண்டியது இவ்வுலக சொத்துக்களில் அல்ல, மாறாக ஆண்டவர் மீது நம்பிக்கைகொண்டு விழிப்பாக செயல்படும்போது நம்மை அனைத்து பாவ தீமைகளில் இருந்து பாதுகாப்பார். அன்புக்கு தாய் காத்திருப்பது போல, நட்புக்கு நண்பன் காத்து இருப்பது போல், எல்லையில் போர்வீரன் இருப்பதுபோல், நிலையான நிறைவான வாழ்வு பெற்றுக்கொள்ள நாம் எல்லா சூழல்களிலும் பாவ செயல்களை விட்டு விழிப்புணர்வுடன் செயல்பட முன்வருவோம்.

## 2. பரிசுத்தமாய் வாழ்வதில் விழிப்புணர்வு:-

விழிப்புணர்வு தூய்மையை நோக்கிய பயணத்தில் நாம் தனியாக இல்லை. கிறிஸ்து நம்மோடு கூட இருந்து நம்மை தூய்மையானவர்களாகவும், நிறைவுள்ளவர்களாகவுமாக்கிக் கொண்டிருக்கிறார். தம்மையே என்றென்றைக்குமான ஒரே பலியாக செலுத்தி அதன் வழியாக நம்மை தூயவர்களாக்கி நிறைவுள்ளவராக்கினார் (எபிரெயர் 10:11-14).

நாம் விழிப்புணர்வுடன் இருந்து நம்மை நல்வழியில் நடத்திகொண்டால் மட்டும் போதாது. மாறாக பிறரையும் நல் வழிக்கு அழைத்துவர அழைக்கப்படுகிறோம். இது விழிப்புணர்வோடு இருத்தலின் அடுத்தபடி நிலையாகும்.

பலரை நல்வழிக்குக் கொணர்ந்தவர் விண்மீன்களைப்போல் என்றென்றும் முடிவில்லாக் காலத்திற்கும் ஒளிவீசித் திகழ்வர் என தானியேல் 12:3-ல் பார்க்கிறோம்.

கூட வாழ்கின்றவர்கள் எப்படியும் போகட்டும் நான் என்னைப் பாதுகாத்துக் கொண்டால் போதுமானது என்ற சுயநல ஆன்மீகம் தழைத்தோங்குகிற காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது சரியான ஆன்மீகம் கிடையாது. இது போலியானது. இதிலிருந்து விழிப்படைந்து பிறரையும் பரிசுத்த பாதையில் அழைத்து செல்லும் அழைப்பு நமக்கு முன்பாக வைக்கப்படுகிறது.

நம் வாழ்வில் ஒவ்வொருவருமே வாழ்நாள் முழுதும் எதையாவது தேடிக்கொண்டிருக்கிறோம். தேடல் இல்லா வாழ்வு இல்லை. தேடல் என்பது இரண்டு வகை. கடவுளை தேடுவது முதல் வகை, அழியும் பொருளை தேடுவது இரண்டாம் வகை. நாம் எதைத் தேடுகிறோம்? பரிசுத்த வாழ்வைத் தேடுகிறோமா? விழிப்புணர்வோடு ஜெபிக்கிறோமா? நமது பரிசுத்த வாழ்வு எப்படியுள்ளது? சிந்திப்போம்.

- கடந்த கால தோல்விகளை நினைத்துக்கொண்டே இருக்காமல் இறை விசுவாசத்தோடு செயல்படுகிறோமா?
- சென்ற ஆண்டில் இருந்த விசுவாசமும், விழிப்புணர்வும் நம்மிடம் இருக்கிறதா?
- 10 ஆண்டு (or) 5 ஆண்டுகளுக்கு முன் குடும்பத்தோடு சேர்ந்து ஜெபித்த மனநிலையிலே நின்று ஜெபிக்கிறோமா?
- தனிமையில் எனக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள உறவு எல்லா சூழல்களிலும் விழிப்பாக இருக்கிறதா அல்லது தொய்வை ஏற்ப்படுத்துகிறதா. இப்படிப்பட்ட கேள்விகளை எழுப்பும்போது நம் இதயம் சொல்லும் பதில் என்ன? இழந்து போன பரிசுத்தம், விழிப்பு, ஆர்வம் இவைகளை மீண்டும் மேற்கொள்ளும் முயற்சி என்ன?

உலக முடிவை வீணாய் நினைத்து உள்ளம் கலங்கத் தேவையில்லை. நலமாய் வாழ்ந்து விழிப்பாய் இருந்தால் நாளும் நமக்குக் கவலையில்லை என்ற சிந்தையோடு புதிய ஆண்டில் பாவங்களை வெறுத்து, பரிசுத்த வாழ்வு வாழ்ந்து பரமனை நாடுவோம். புத்தாண்டு அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமையட்டும். ஆமென்!

**என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்குச் செவி கொடுக்கிற மனுஷன் பாக்கியவான். நீதி. 8:34**

**அன்புடன் போதகர்,**
**Rev. S. போவாஸ்**




**வாசகர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

# நரி நண்பர்கள்



ஒரு நரியும் ஓர் ஒட்டகமும் சிநேகிதராயிருந்தனர். ஒருநாள் "இருவரும் ஆற்றைக் கடந்து அப்புறம் போய்ச் சாப்பிடலாமே" என்றது நரி. கரும்புத் தோட்டம் அந்தப்புறம் இருந்தபடியால் ஒட்டகமும் ஒத்துக்கொண்டது. நரிக்கு நீந்த முடியாததால் ஒட்டகத்தின் முதுகில் அது ஏறிக்கொண்டு இருவரும் அக்கரை சேர்ந்தனர். நரி ஆற்றங்கரையில் நண்டுகளைப் பிடித்து சாப்பிட்டபோது ஒட்டகம் கரும்பை ரசித்துச் சுவைத்தது.

மத்தியானமானபோது நரிக்கு வயிறு நிறைந்துவிட்டதால் அதற்குப் போகலாம் என்று தோன்றியது. ஆனால் ஒட்டகமோ, "பொறு, எனக்கு இன்னும் வயிறு நிரம்பவில்லை" என்றது. நரி பொறுமையிழந்து தந்திரமாக ஊளையிடத் துவங்கியது. சத்தத்தைக் கேட்ட காவல்காரன் ஒடி வந்தான். ஒட்டகத்தைப் பார்த்த அவன் தன் கம்பால் அதை நையப்புடைத்து விட்டான். பாவம், ஒட்டகம் ஓடோடி நதியைக் கடக்கத் துவங்கியது. நரி சந்தோஷமாகத் தாவி ஒட்டகத்தின் முதுகில் ஏறி உட்கார்ந்து கொண்டது.

ஒட்டகம் கேட்டது, "தம்பி, ஏன் அப்படி என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டாய்?" நரி, "அண்ணா, என்னை மன்னித்துக்கொள், என் வயிறு நிறைந்துவிட்டால் அப்புறம் என்னால் ஊளையிடாமல் இருக்கவே முடியாது. என்னால் அடக்கிக்கொள்ளவே முடியாது", என்றது. ஒட்டகம், "அப்படியா," என்று கேட்டுக்கொண்டது. ஆற்றின் நடுவிற்கு அவர்கள் வந்தவுடன் ஒட்டகம் வேகமாக தன் முதுகைத் குலுக்கத் துவங்கியது. "அண்ணா, அண்ணா, முதுகைக் குலுக்காதே, நான் நீரில் வீழ்ந்து மூழ்கிவிடுவேன்" என்று அலறியது நரி. "மன்னித்துக்கொள் தம்பி, என் வயிறு நிறைந்துவிட்டால் முதுகைக் குலுக்காமல் எனக்கு இருக்க முடியாது" என்றது ஒட்டகம் நரி கீழே விழுந்து செத்துப்போனது.

கெட்ட நண்பர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

**அன்புடன் போதகர்**

## தீர்மானங்கள் திருப்புமுனையாகட்டும்



மண்ணில் : 17-08-1874
விண்ணில் : 01-01-1945
ஊர் : வெள்ளாளன் விளை
நாடு : இந்தியா
தரிசன பூமி : தோர்ணக்கல், இந்தியா

அது ஒரு மாபெரும் மிஷனெரி மாநாடு. அலைகடல் என மக்கள் கூட்டம். மான்கள் நீரோடைகளைத் தேடித் தவிப்பதுபோல, பேராயர் V.S. அசரியாவின் இறை வார்த்தைக்காக மக்கள் ஆவலாய் காத்துக்கொண்டிருந்தனர்.

இறைசெய்தியின் இனிய நேரம், வேகமாகப் பறக்கும் அம்புகளைப்போல இறை பணியின் அவசியத்தையும், தேவைகளையும் அனைவர் உள்ளத்திலும் பாயச் செய்தார் அசரியா. இறைப் பணியின் வாஞ்சைப் பற்றி எரிந்தபோது...

“மிஷனெரிப் பணிக்காக அர்ப்பணிப்போர் உங்களில் எத்தனை பேர்? அவர்கள் முன்னே வரலாம்.” அசரியா அறைகூவல் ஒன்றை விடுத்தார்.

திடீரென்று புயலெனச் சீறி எழுந்தான் ஓர் வாலிபன். “நீங்களே ஏன் ஒரு மிஷனெரியாகச் செல்லக்கூடாது?

அந்தோ! அசரியாவின் உள்ளம் உடைந்தது. கதறிக் கதறி அழ ஆரம்பித்தார். இயேசுவின் கைகளில் இதயத்தைக் கொடுத்தார். தோர்ணக்கல் என்ற பகுதியில் அவர் தன் கால்களைப் பதித்தார். அது கர்த்தரின் பூமியாகக் கனிந்தது. 8000 கிறிஸ்தவர்கள் என்ற எண்ணிக்கை 2,26,000 ஆக உயர்ந்தது.

மாபெரும் மிஷனெரி, மிஷனெரி இயக்கத்தின் விடிவெள்ளி, முதல் இந்திய பேராயர் என்று போற்றப்பட்ட இவர் IMS, NMS, CSI போன்ற மாபெரும் நிறுவனங்கள் உருவாக அடித்தளமிட்டார்.

அஞ்சா நெஞ்சத்துடன் அயராது உழைத்தவர்; கிறிஸ்துவின் உத்தமத் தொண்டன்; கிறிஸ்தவர்களின் வழிகாட்டி; அர்ப்பணிப்பின் மகுடம் என்ற பெரும்புகழுடைய V.S. அசரியா இதே நாள் ஜனவரி 1-ல் 1945-ம் ஆண்டு கோதுமை மணியானார்.

அன்பரே! இப்புத்தாண்டில் உமது தீர்மானம் சிறந்ததாக அமையட்டுமே!

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** பிறர் செய்யவேண்டும் என்று எதிர்பார்ப்பதை விட அந்தப் பணியை நீங்களே ஏன் செய்யக்கூடாது? – பண்டித ராமாபாய்

**குயவனின் கரங்களில்:** அன்புள்ள ஆண்டவரே! என்னையே உம் கரங்களில் தத்தம் செய்கின்றேன்.

**தியானத்திற்கு** : ஆதி. 1-2, சங். 1-2, மத். 1-2

## துக்கம் பகிர்வோம்

### கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை அங்கத்தினர் Mr. Godwin அவர்களின் தகப்பனார் **Mr. Singarayan** அவர்கள் நவம்பர் மாதம் 12-ஆம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள்.

நமது சபை அங்கத்தினர் Mr. Saju Sanjay அவர்களின் தகப்பனார் **Mr. Rabi** அவர்கள் டிசம்பர் மாதம் 4-ஆம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள்.

தங்கள் தகப்பனாரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் – ஜனவரி 2022

| | | |
|---|---|---|
| 01-01-2022 | முதலாம் திருமறைப்பகுதி | committee member |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | committee member |
| 07-01-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Mahizha Jenkin |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Sylas |
| 14-01-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Mary Praveena Gobinath |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Victor Thayasingh |
| 21-01-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Nisha Broosewelt |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. C.A. Vinu |
| 28-01-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Nisha Rajan |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Vinobha |

## "மனைவியின் விழிப்புணர்வு கணவனை பாதுகாத்தது"

வாழ்க்கை என்பது வெற்றியும், தோல்வியும், சவாலும் நிறைந்தது. அது சிறப்பானதாக அமைய வேண்டும் என்றால் விழிப்புணர்வு தேவை. திருமறையில் நற்குணசாலிகளாயிருந்த பெண்களின் வரிசையில் காலேபின் சந்ததியில் பிறந்து, முரட்டு குணம் கொண்ட நாபால் என்பவருக்கு மனைவியாய் வாழ்ந்த மகா புத்திசாலியும், அழகும் கொண்ட அபிகாயில் ஞானமாய், கடவுளுக்கு பயந்து, தன் புருஷனுக்கு கீழ்படிந்து, சவால் நிறைந்த வாழ்வு வாழ்ந்தாள், தன் கணவனின் தீமையான செயலால் வாழ்வு அழிக்கப்படும் சூழ்நிலை வந்த போது விழிப்புணர்வு கொண்டு தன் கணவனை ஆபத்தில் இருந்து பாதுகாத்தாள். தன் குடும்பத்தையும் கட்டிக்காத்தாள். அவளின் விழிப்புணர்வால் ஏற்பட்ட நன்மை என்ன என்பதை 1 சாமுவேல் 25-ம் அதிகாரத்தை மையமாக கொண்டு சிந்திப்போம்.

### 1. தாழ்மையில் விழிப்புணர்வு:- (1சாமுவேல் 25:23-24)

தாழ்மை மனித வாழ்வில் இருக்க வேண்டிய மிக முக்கியமான பண்புகளில் ஒன்று. அபிகாயிலின் கணவர் நாபாலுக்கு இந்த பண்பு இல்லை. செல்வம் படைத்த நாபால் மனிதனை மதிக்கவோ, பிறர் மதிப்பை பெறவோ நற்பண்பு உள்ளவனாய் இல்லை. இதனால் தாவீது அரசனின் நன்மையான செயல்களை தெரியாதவனாய், அவர் இக்கட்டான சூழ்நிலையில் இருந்தபோது உணவுக்காக அனுப்பிய வேலைக்காரரை வெறுமையாய் அனுப்பிவிட்டான். தாவீதின் வாழ்த்து செய்தியை கேட்கவோ, உதவி செய்யவோ, பரிதாபம் கொள்ளவோ, நாபாலின் மனம் இடம் கொடுக்கவில்லை. கடும் சொற்களால் திட்டி விரட்டினான். புத்தியில்லாத கணவனின் செயலை கேள்விப்பட்ட அபிகாயில் கலங்கினாலும் நிதானமாய், ஞானமாய் செயல்பட்டாள். அவள் இரண்டு துருத்தி திராட்சரசம், 200 அப்பம், சமைத்த 5 ஆடு, 5படி வறுத்தபயறு, வற்றலாக்கப்பட்ட 100 திராட்சக்குலை, வற்றலான 200 அத்திப்பழ அடைகளையும் எடுத்து கழுதைகளின் மேல் ஏற்றி தாவீதுக்கு அனுப்பினாள். மட்டுமல்ல அவளும் பின் சென்று தாவீதை தூரத்தில் கண்டபோதே தன்குலப் பெருமை, அழகின் மேன்மை இவைகளை விட்டுவிட்டு தன் கணவன் செய்த தவறை மன்னித்து தான் கொண்டு வந்து இருக்கும் உணவினை ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையோடு வேண்டினாள்.

## 2. தன் குடும்பத்தை காப்பதில் விழிப்புணர்வு:- (1சாமுவேல் 25:34)




தன் கணவர் நாபாலை அழிப்பதற்காக சிவந்த கண்களோடு வாளை கையில் ஏந்திப் போருக்கு வந்து கொண்டிருந்த தாவீதை எதிர் கொள்ளுகிறாள். இது ஒரு சாதாரண காரியமல்ல, ஒரு பெண் அரசனை எதிர்கொள்வது, தன் உயிரை பணயம் வைத்து தன் குடும்பம் அழிந்துவிடாதபடி வாளோடு வந்த தாவீதை தன் பணிவான நாவால் எதிர்கொள்கிறாள். தன் அழகிய முகம் தரையில் பட விழுந்து கிடக்கிறாள், தான் பேச முந்தாமல் உத்தரவு கேட்கிறாள். எத்தனையோ பெண்கள் தங்களை நியாயப்படுத்த நினைத்து வார்த்தைகளினாலே குடும்பங்களை சிதைத்து விடுகின்றனர். சமாதான குறைவும் ஏற்ப்படுகிறது. ஆனால் அபிகாயில் தன் குற்றத்தை ராஜாவிடம் ஒத்துக்கொள்கிறாள். வேலைக்காரரை தான் காணவில்லை என உண்மையை கூறுகிறாள். தன் குற்றங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் அல்லவா? தன் புருஷனின் குற்றம் தன் மேல் சுமரட்டும் அவரது புத்தியீனமான மனநிலையால் நேரிட்ட அக்கிரமத்தை தயவாய் மன்னிக்கும்படி கேட்கிறாள். நீதிமொழிகள் 15:1 கூறுவது போல் மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும். தாவீதின் செவிகள் கேட்க மெல்லிய குரலில் தாழ்ந்த மனதுடன் எடுத்துச் சொல்லிய அபிகாயில் ஞானத்தோடு செயல்பட்டாள். கடவுளின் அபிஷேகம் பெற்ற தாவீதை, வாழ்த்தி மனதை கவர்ந்து இரக்கம் பெறுகிறாள். குடும்பத்தை அழிக்க வந்த தாவீது அவளை ஆசிர்வதிக்கிறார். உன் யோசனைகள் ஆசிர்வதிக்கப்படுவதாக, இரத்தம் சிந்தாமல் தடுத்த கர்த்தரின் ஜீவனைக் கொண்டு சொல்கிறேன் சமாதானத்துடன் வீட்டுக்கு போ என்றார். பெரிய யுத்தம் வர இருந்த சமயத்தில் கடவுளின் தயவினால் அனுக்கிரகம் பெற்ற தாவீதிடம் மன்னிப்பை பெற்றாள். தன் உயிரையே தத்தம் செய்து திரும்பினாள். காலையில் தன் கணவன் மது போதை தெளிந்தபோது அவனிடம் வாக்குவாதம் செய்யாமல், மெல்லிய குரலில் அமைதியாக நன்றி நிறைந்த உள்ளத்துடன் நடந்ததை விவரமாக தெளிவாக கூறினாள். அவன் தன் தவறினை நினைத்து வருந்தினான்.

இன்றும் பல குடும்ப தலைவர்கள் போதைபொருள்களுக்கு அடிமையாகி இருக்கலாம். இதனால் குடும்பம் அமைதி இழந்த நிலையில் காணப்படலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆண்டவரின் சமுகத்தில் விழிப்பாய் இருந்து ஜெபிப்பதுதான் முக்கியம். அது பெரிய மாற்றத்தை கொண்டு வரும். ஆகவே அபிகாயிலை போல தாழ்மையோடு விழிப்புணர்வோடு இருந்தால் குடும்பத்தில் பெரிய மாற்றத்தை காணலாம். கடவுள் நம் குடும்பங்களை ஆசிர்வதிப்பாராக!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி. M. R. பெக்ஸிலின் போவாஸ்**

## எண்கள் ~ தொடர்

எண்கள் என்பது முக்கியமானது, நாம் பொருள்களின் எண்ணிக்கை எவ்வளவு, ஒரு கூடுகையில் எவ்வளவு மக்கள் கலந்து கொள்வார்கள் என எண்ணிக்கை கேட்கிறோம். இண்றைய நாட்களில் அரசு கூட முக்கியமான கூடுகைளில் இவ்வளவு எண்ணிக்கையில்தான் மக்கள் கலந்து கொள்ள வேண்டும் என கட்டுப்பாடு உள்ளது.

திருமறையிலும் எண்கள் குறித்து சொல்லப்பட்டுள்ளது அவை எவற்றை கற்றுத்தருகிறது என பார்ப்போம்.

### எண் ஒன்று:-

முதல் எண்ணுக்கு ரொம்ப முக்கியத்துவம் உண்டு, போட்டிகளில் முதல் பரிசு, தேர்வில் முதல் மதிப்பெண், விளையாட்டில் முதல் பரிசு பெற்றாலே பெருமை, மதிப்பு உண்டு இது உலகு சார்ந்துள்ளது.

திருமறையில் முதல் எண் குறித்து என்ன சொல்கிறது என்றால். 1 திமோத்தேயு 2:5-ல் ஆண்டவர் ஒருவரே. ஆண்டவர் அனைத்தையும் கடந்து நிற்ப்பவர், அவர் உண்டு என நாம் நம்புகிறோம். மனிதனுக்கும், ஆண்டவருக்கும் மத்தியஸ்தர் ஒருவர். எனவே ஆண்டவர் ஒருவர்தான் என்பதை முதல் எண் நமக்கு கற்றுத்தருகிறது.

### இரண்டாம் எண்:-

உலகு சார்ந்த நிலையில் இரண்டாம் எண்னிற்கும் மதிப்பு உண்டு. இரண்டாம் இடம் பிடித்தாலும் மகிழ்ச்சிதான்.

கடவுள் உலகை படைத்தார், படைத்த உலகை பார்த்து ரசித்தார். அவைகளை ஆள மனிதனை தனது சாயலில் படைத்தார். அவர்தான்

**ஆதாம்**. மனிதன் தனிமையாய் இருப்பது நல்லது அல்ல எனக் கண்ட கடவுள் அவனுக்கு ஏற்ற துணையை படைத்தார். அவள்தான் **ஏவாள்** இப்போது மிகவும் நல்லது என்றார். ஆதி 3:20, நமது ஆதி பெற்றோர் இரண்டு பேர் ஆதாம், ஏவாள். இரண்டாம் எண் இதைத்தான் கற்றுத்தருகிறது.

### எண் மூன்று:-

மூன்றாம் எண் என்றாலும் மதிப்புதான் உலகு சார்ந்த போட்டிகளில் மூன்றாம் இடம் பெற்றாலும் மகிழ்ச்சிதான்.


ஒருவர் தன்னை குறித்து அறிமுகம் செய்யும்போது தனது பெற்றோர், அவர்களின் பெற்றோர் இப்படியாக முன்னோர்களை சொல்லி அவர்களின் வழிமரபில் வந்தவன் என பெருமைபடுவது உண்டு. திருமறையில் முற்பிதாக்கள் மூன்று பேர்.

**1. ஆபிரகாம், 2. ஈசாக்கு, 3. யாக்கோபு**

யாத் 3:6, மூன்றாம் எண் இதை கற்று தருகிறது.

(**எண்கள்** தொடரும்....)

## விழிப்புணர்வுடன் வாழ்வோம்



இயேசு நாதர் தம் சீடர்களுடன் பெத்தானியாவிலிருந்து எருசலேமுக்கு பயணமானார். பயணித்தக் களைப்பில் வழியில் பசி ஏற்படவே, அவரது பார்வையில் இலைகள் மிகுந்த அத்தி மரம் பட்டது. அது அத்திப்பழக்காலம் இல்லை என்றாலும் இலைகள் நிறைந்திருந்ததால் அத்திமரம் கனியுடன்தான் இருக்க வேண்டும் என நினைத்தார். அருகில் வந்து அண்ணாந்து பார்த்த போதுதான் பசியாற்றிக்கொள்ளலாம் எனும் நம்பிக்கை அவமாகியது; ஆசை நிராசையானது; காட்சி கானல் நீரானது. இதனால் கனியற்றிருந்த அத்தி மரத்தை இயேசுநாதர் சபித்தார். மரம் பட்டுப் போயிற்று.

### 1. எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்:- (மத்தேயு 21:19a)

இயேசுநாதர் அத்தி மரத்தின் மீது கொண்ட எதிர்பார்ப்பு இயல்பானது. துளிர் தோன்றி இலையுடன் இருந்ததால் கனிகள் இருக்க வேண்டும். இதுவும் இயல்பானது. மரம் ஏமாற்றத்தைக் கொடுத்தது. படைப்பு,

படைத்தவனை ஏமாற்றியது. பகட்டானத் தோற்றத்தைத் தந்ததே தவிர பசிக்கு உணவைத் தரவில்லை. பார்வைக்குத்தான் பச்சைப் பசேலென்றக் காட்சி. ஆனால் மகசூல் தராத மரமாய் நின்றது. இதே போன்று இறைவன் மனிதனிலும் கனி நிறைந்த வாழ்வை எதிர்பார்க்கிறார். காரணம் கனிதரவே கடவுள் மானுடத்தைப் படைத்தார். நம்மில் கனி கொடுக்கும் வாழ்வை கடவுள் எதிர்பார்க்கும் போது, நாம் விழிப்புடன், ஏமாற்றாமல் இருக்க வேண்டும் என இறைவன் நமக்கு கற்றுத் தருகிறார்.

இன்று இறை எதிர்பார்ப்பில் ஏமாற்றம்தான் தொடருகிறது. ஆதாம் முதல் தொடர்ச்சியாக மனுக்குலத்தின் நிலை அன்பில், விசுவாசத்தில், ஜெப ஜீவியத்தில், சாட்சியின் வாழ்வில் அனைத்திலும் விழிப்புணர்வு இல்லாமல் போலித்தனமான வாழ்வு தொடர்ந்து வருகின்றது. போலியான வாழ்வால் வளம் காண முடியாது. நெற்பயிர்களுக்கிடையில் காணக் கிடக்கும் களைகள் அறுவடையின் போது கழிக்கப்படுவதுபோல விழிப்புணர்வு இல்லாமல் போலி வாழ்வுடையோர் ஒதுக்கப்படுவது நிச்சயமே.

## 2. வார்த்தையும் வல்லமையும்:- (மத்தேயு 21:19**b**)

இறைவனின் வார்த்தையில் வல்லமையுண்டு. படைப்பு முதற்கொண்டு வார்த்தையின் முக்கியத்துவம் உணர்த்தப்படுகிறது. “அவர் சொல்ல ஆகும், கட்டளையிட நிற்கும்” என்கிறது திருமறை. வார்த்தையால் தம் வல்லமையை வெளிப்படுத்தியவர் (மத் 8:23-27). போலி நிலையிலுள்ள அத்திமரத்தையும் சபித்து தம் வல்லமையை வார்த்தையால் உறுதிப்படுத்தினார். அவரைப் பின்பற்றின சீடர்களும் அவரது திருப்பெயரால் அற்புதத்தை வார்த்தையின் வல்லமையால் நிகழ்த்தினர் (அப் 3:1-10).

ஒரு மனிதரை நல்லவரா? கெட்டவரா? என பார்க்க அவரது வார்த்தையே ஊடகமாகிறது. வார்த்தையே தொடர்புக்கு அடிப்படை அலகாகும். வார்த்தையைத் தேவைக்கும் தேவையற்றதற்கும் பயன்படுத்தலாம். அப்படிப்பட்ட வார்த்தை சக்தி மிக்கதாய் இருக்குமானால் படைத்தவரின் வார்த்தையின் வல்லமை பன்மடங்காக இருக்குமன்றோ? நாம் விழிப்புடன் இருந்து வார்த்தைகளை கையாளக்கடவோம். இறை வார்த்தைக்கு மதிப்பளிப்போம். இறை வார்த்தை வல்லமையுள்ளது.

பசுமையாகக் காட்சி தந்து கனிதராத அத்திமரம் கிறிஸ்துவின் வார்த்தையின் வல்லமையால் பட்டுப்போயிற்று. அனைத்து சாபங்களையும் தனதாக்கிய கிறிஸ்து நாதர் கனிதராத மரத்தைச் சபித்தார். நம்மில் கிறிஸ்து எதிர்பார்க்கும் நற்பண்புகளான அன்பு, சந்தோஷம், சமாதானம், தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சயைடக்கம் போன்ற கனிகளை கொடுக்கிறவர்களாய் விழிப்புடன் வாழ்வோம்.

### 3. நியாயத்தீர்ப்பும் நினைவுகூரலும்:- (மத்தேயு 3:10)

நல்ல கனி கொடாதமரம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் (மத் 3:10) என்கிறார். நற்கனிகளுக்காய் எதிர்பார்க்கப்பட்ட தோட்டம் கசப்பான கனி கொடுத்ததால் தோட்டம் தகர்க்கப்படுகிறது. (ஏசா 5:1-7). பிறருக்கு இடறல் உண்டாக்குகிறவர்கள் உண்டாக்குகிறவைகள் இல்லாமல் ஆக வேண்டும். அல்லது பயனில்லாமல் போக வேண்டும் (மாற் 9: 42-47). அதன் படி இயேசு அத்திமரத்திற்குச் சாபம் கொடுத்தார். அது நிறைவேறிற்று. இதனை ஒருவிதத்தில் நியாயத்தீர்ப்புக்கு ஒப்பிடலாம். அவரவருக்கு நான் அளிக்கும் பலன் என்னுடன் வருகிறது என்றவர் கனியற்ற வாழ்வுக்கு பலன் அழிவுதான் என்பதை உறுதிப்படுத்துகிறார்.

கடைசி நாட்களில் நடைபெறும் நியாயத்தீர்ப்பை, முன் அடையாளமாய் இந்நிகழ்ச்சி எச்சரிக்கிறது. குறிப்பாக விழிப்புணர்வில்லா வாழ்வுக்கு முற்றுப்புள்ளி தருகிறது; பகட்டான அல்லது போலியான வாழ்வுக்கு எச்சரிப்புத் தருகிறது. நாம் தூயவாழ்வு வாழ்ந்து, நற்செயல் புரிந்து, நற்கனிகள் கொடுத்து நல்வாழ்வு வாழ்வோம். நம் வாழ்வு பிறர் இடற அமையாமல் விழிப்புடன் இருந்து முன் மாதிரியான வாழ்வு வாழ முயலுவோமாக.

**- V.G. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## பெண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 103

### ஜனவரி 2022 மாத கேள்விகள்

**(1கொரிந்தியர் அதிகாரம் 1 முதல் 9 முடிய)**

1. எது புளித்தமா அல்ல?
2. தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளாதவன் யார்?
3. அப்போஸ்தல ஊழியத்திற்கு சபையார் யாராயிருக்கிறார்கள்?
4. எதன் மூலம் விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்கு பிரியமாயிற்று?
5. அவிசுவாசியான மனைவி யாரால் பரிசுத்தமாக்கப்படுகிறாள்?
6. அப்போஸ்தலர் எவ்வாறு வேண்டிக்கொள்ளுகிறார்கள்?
7. கிறிஸ்து யாருக்காக மரித்தார்?
8. யாருடைய ஆவி உங்களில் வாசமாய் இருக்கிறது?
9. எதற்கு விலகியோடினால் மனுஷன் செய்கிற பாவம் சரீரத்திற்கு புறம்பாயிருக்கும்?

10. பந்தயத்திற்கு போராடுகிறவர்கள் எதைப் பெறும்படிக்கு இச்சையடக்கமாய் இருப்பார்கள்?
11. தேவன் யாரைக்குறித்து தீர்ப்புச் செய்வார்?
12. ஞானத்தை தேடுகிறவர்கள் யார்?
13. பவுலுக்கு யாரைக் குறித்து கர்த்தரால் கட்டளை இல்லை?
14. கிறிஸ்து யாருடையவர்?
15. எதை ஒரு பொருளென்று எண்ணி அதற்கு படைக்கப்பட்டதை புசிக்கிறார்கள்?
16. பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாய் இருப்பது எது?
17. எதை பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை?
18. எதில் தேவனுடைய ராஜ்யம் உண்டாயிருக்கிறது?
19. பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்கள் யார்?
20. தேவனுக்கு உடன் வேலையாட்கள் யார்?

## ஆண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 88

### ஜனவரி 2022 மாத கேள்விகள்

### (எரேமியா அதிகாரம் 24 முதல் 32 முடிய)

1. நியமங்கள் ஒழிந்துபோனால் அற்றுப்போவது யார்?
2. இந்த வருஷத்திலே நீ சாவாய் யாரிடம் கூறப்பட்டது?
3. எருசலேம் நகரம் எவைகளினால் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படும்?
4. மீகாவின் ஊர் எது?
5. வெள்ளியை எதில் நிறுத்துக் கொடுத்தான்?
6. சிதேக்கியா எதின்மேல் ராஜாவாயிருந்தான்?
7. எரேமியா நிருபத்தை யாரிடத்தில் கொடுக்கும்படி அனுப்பினார்?
8. எங்கிருந்து மகா புசல் எழும்பும்?
9. கர்த்தருக்கு பிரியமான பிள்ளை யார்?
10. யார் பிரசவிக்கிறதுண்டோ என கேட்டுப்பார்க்க கர்த்தர் கூறுகிறார்?
11. எரேமியாவிடம் கர்த்தர் எதை உண்டுபண்ண கூறினார்?
12. முதுகை காட்டினவர்கள் யார்?
13. தீர்க்கதரிசனஞ்சொல்லி பொய்யை நம்பப்பண்ணினவன் யார்?

14. கல்தேயர் தேசத்துக்கு சிறைப்பட்டு போகவிட்ட யூதரை எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது?
15. அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன் வசனத்தை ஆதாரத்துடன் எழுதுக?
16. எத்தனை வருடம் கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாயிற்று?
17. கர்த்தருடைய காற்று என்று கூறப்பட்டுள்ளது எது?
18. நீ சாகவே சாகவேண்டும் எனக் கூறியது யார்?
19. மரநுகத்துக்கு பதிலாக எதை உண்டுபண்ண கர்த்தர் கூறினார்?
20. பிதாக்கள் எதை தின்றார்கள்

*May God Bless All*

## Birthday Celebrants – January 2022

| | |
|---|---|
| 04th January | Master. Akash David Mehandro, S/o Mr. Baskar |
| 04th January | Mrs. Jenifba, W/o Mr. Jerin |
| 06th January | Mr. Victor Thayasingh |
| 06th January | Miss. Agnes Yarona, D/o Mr. Kanagavel |
| 06th January | Mrs. Monisha, W/o Mr. Jerry Jones |
| 11th January | Miss. P. Gardeina Eve, D/o Mr. Prem Vijins |
| 12th January | Mr. R. Saju |
| 13th January | Miss. Angelin Pius Justa, D/o Mr. Vinolin Vetha Kumar |
| 15th January | Miss. Jessie Chandra, D/o Mr. Kasiraja |
| 18th January | Master. D. Jason, S/o Mr. Dinakaran |
| 19th January | Mr. Jean C. R. Shibin |
| 19th January | Miss. Jayna Giftlin, D/o Mr. Bensam |
| 21st January | Mr. T. Gnana Ruban |
| 23rd January | Mrs. Binita, W/o Mr. Pratheesh |
| 26th January | Miss. Jevisha, D/o Mr. Jino John |
| 26th January | Miss. B. A. Braelyn Jo, D/o Mr. Bejo Nelson |
| 26th January | Mr. M. Sheeken Paulk |
| 27th January | Miss. Sujimol, D/o Mrs. Susamma |

| | |
|---|---|
| 29th January | Mrs. Sujithra, W/o Mr. T. Raju |
| 29th January | Master. Mishael Vinobha, S/o Mr. Vinobha |
| 29th January | Master. Wesley J. Bose, S/o Mr. Jose Chandra Bose |
| 31st January | Miss. Karen Edward, D/o Mr. Edward Sam |

## Wedding Day Anniversaries – January 2022

| | |
|---|---|
| 01st January | Mr. Robert Dhas & Mrs. R. S. Bindhu |
| 04th January | Mr. Jerry Sathya & Mrs. Sapthekha |
| 04th January | Mr. Nalam Dimalson & Mrs. Sara Angelin Sathiya |
| 07th January | Mr. Vinobha & Mrs. Sumimol |
| 09th January | Mr. J. Justin Johnson & Mrs. Jenisha |
| 11th January | Mr. Nethaji Jacob Durai & Mrs. Diana Angel |
| 15th January | Mr. Ajin & Mrs. Berlin Sony |
| 18th January | Mr. Prem Vijins & Mrs. Shakina |
| 19th January | Mr. C. Sujin & Mrs. Gracilin Melba |
| 20th January | Mr. S. Shashank & Mrs. Shyni |
| 30th January | Mr. Pushpakaran & Mrs. Nirmala |

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.
2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.
3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
   - ஓய்வுநாள் பள்ளி
   - பெண்கள் ஐக்கிய சங்கம்
   - ஆண்கள் ஐக்கிய சங்கம்
   - பாடகர் குழு
   - ஜெபக் குழு

அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.
5. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.
2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.
3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.
4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.
5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.

2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.

3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.

5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு மத சார்பின்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.

2. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.

3. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.

4. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.

2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.

3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.

4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.

5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

## அனுதின மன்னா – ஜனவரி 2022

அன்பர்களே! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தினமும் திருமறை வாசிக்கும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே வாசிக்க தீர்மானம் எடுங்கள். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அவரது வார்த்தையினால் போஷித்து உங்களை ஆசீர்வதிப்பாராக. திருமறைப்பகுதியை வாசித்து குடும்ப ஜெபத்தில் தனி ஜெபத்தில் தியானித்து ஓராண்டில் பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| **ஜனவரி 1** | **சனி** | **பிலிப். 4:1-9** | **பிலிப். 4:7** | **ஆதி 1-3** |
| ஜனவரி 2 | ஞாயிறு | நீதி. 12:1-28 | நீதி. 12:28 | ஆதி. 4-7 |
| ஜனவரி 3 | திங்கள் | லூக். 9:1-17 | லூக். 9:17 | ஆதி. 8-11 |
| ஜனவரி 4 | செவ்வாய் | லூக். 10:1-12 | லூக். 10:5 | ஆதி. 12-16 |
| ஜனவரி 5 | புதன் | லூக். 11:1-13 | லூக். 11:10 | ஆதி. 17-19 |
| ஜனவரி 6 | வியாழன் | லூக். 11:33-44 | லூக். 11:41 | ஆதி. 20-22 |
| **ஜனவரி 7** | **வெள்ளி** | **லூக். 12:1-12** | **லூக். 12:2** | **ஆதி. 23-25** |
| ஜனவரி 8 | சனி | லூக். 12:22-34 | லூக். 12:29 | ஆதி. 26-28 |
| ஜனவரி 9 | ஞாயிறு | சங். 34:1-22 | சங். 34:18 | ஆதி. 29-31 |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஜனவரி 10 | திங்கள் | யாத். 15:1-18 | யாத். 15:12 | ஆதி. 32-33 |
| ஜனவரி 11 | செவ்வாய் | யாத். 16:1-12 | யாத். 16:12 | ஆதி. 34-36 |
| ஜனவரி 12 | புதன் | யாத். 19:1-13 | யாத். 19:5 | ஆதி. 37-39 |
| ஜனவரி 13 | வியாழன் | ரோமர் 2:1-16 | ரோமர் 2:6 | ஆதி. 40-42 |
| **ஜனவரி 14** | **வெள்ளி** | **ரோமர் 4:1-12** | **ரோமர் 4:7** | **ஆதி. 43-45** |
| ஜனவரி 15 | சனி | ரோமர் 8:1-13 | ரோமர் 8:12 | ஆதி. 46-47 |
| ஜனவரி 16 | ஞாயிறு | ரோமர் 13:1-10 | ரோமர் 13:8 | ஆதி. 48-50 |
| ஜனவரி 17 | திங்கள் | யோவா. 14:1-15 | யோவா. 14:14 | யாத். 1-4 |
| ஜனவரி 18 | செவ்வாய் | யோவா. 15:1-17 | யோவா. 15:7 | யாத். 5-7 |
| ஜனவரி 19 | புதன் | ஏசாயா 49:8-18 | ஏசாயா 49:15 | யாத். 8-10 |
| ஜனவரி 20 | வியாழன் | ஏசாயா 46:1-13 | ஏசாயா 46:4 | யாத். 11-13 |
| **ஜனவரி 21** | **வெள்ளி** | **சங். 127:1-5** | **சங். 127:5** | **யாத். 14-16** |
| ஜனவரி 22 | சனி | சங். 111:1-10 | சங். 111:10 | யாத். 17-20 |
| ஜனவரி 23 | ஞாயிறு | நீதி. 29:1-13 | நீதி. 29:1 | யாத். 21-23 |
| ஜனவரி 24 | திங்கள் | நீதி. 6:6-19 | நீதி. 6:6 | யாத். 24-27 |
| ஜனவரி 25 | செவ்வாய் | யோபு 9:1-20 | யோபு 9:10 | யாத். 28-30 |
| ஜனவரி 26 | புதன் | யோபு 19:1-25 | யோபு 19:25 | யாத். 31-34 |
| ஜனவரி 27 | வியாழன் | 2நாளா.33:10-17 | 2நாளா. 33:13 | யாத். 35-37 |
| **ஜனவரி 28** | **வெள்ளி** | **1நாளா.29:10-19** | **1நாளா. 29:12** | **யாத். 38-40** |
| ஜனவரி 29 | சனி | 2இராஜா. 4:1-7 | 2இராஜா. 4:7 | லேவி. 1-4 |
| ஜனவரி 30 | ஞாயிறு | உபா. 28:1-14 | உபா. 28:6 | லேவி. 5-7 |
| ஜனவரி 31 | திங்கள் | உபா. 9:11-20 | உபா. 9:18 | லேவி. 8-11 |
| பிப்ரவரி 1 | செவ்வாய் | சங். 46:1-11 | சங். 46:11 | லேவி. 12-14 |
| பிப்ரவரி 2 | புதன் | ஓசியா 12:1-6 | ஓசியா 12:5 | லேவி. 15-17 |
| பிப்ரவரி 3 | வியாழன் | ஆமோஸ் 5:1-14 | ஆமோஸ் 5:4 | லேவி. 18-20 |
| **பிப்ரவரி 4** | **வெள்ளி** | **யோனா 2:1-10** | **யோனா 2:9** | **லேவி. 21-23** |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. S. Bovas**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**